**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.243/2021**

**Prosecution Witnesses : 9**

| | | | |
|---|---|---|---|
| Name | :நாகராஜன் | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)

**03.04.2024**

**முதல் விசாரணை**

நான் இறுதியாக சாப்டுர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று டி.கல்லுப்பட்டியில் குடியிருந்து வருகின்றேன். நான் இதற்கு முன்பு பெருங்குடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 12.01.2016 ம் தேதி நிலைய பொறுப்பில் பணியிலிருக்கும்போது காலை 11.45 மணிக்கு மதுரை லட்சுமணா மருத்துவனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அருண் சுயநினைவு இல்லாமல் இருந்ததால் அவரது தகப்பனார் ராசைய்யா கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 யை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 13/2016 பிரிவுகள் 279,337 இதச வின் படி வழக்கு பதிவு செய்தேன். மேற்படி அசல் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும். வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவம் இடம் சென்று பார்வை மகசர் சாட்சிகளின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வைஇட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.3, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகும். மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரை உள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். சம்பவத்தில் காயம் அடைந்த நபர் இறந்துவிட்டதால் சம்பவத்தில் ஈடுபட்ட வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரி தரப்பில் கு.வி:**

ராசைய்யா என்பவர் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக கேள்விபட்டு மதுரை பைக்காரா லட்சுமணா மருத்துவமனைக்கு வந்து விபத்தில் காயம்பட்ட தனது மகனை பார்த்துவிட்டு புகார் கொடுத்ததாக உள்ளது என்றால்

சரிதான். நான் லட்சுமணா மருத்துவமனை சென்று புகாரை வாங்கினேன் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு புகாரை வாங்கினேன் என்று புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ஆனால் புகாரை பெற்றவுடன் எதிரியை காவல் நிலையத்தில் வைத்து கைது செய்ததாக உள்ளது என்றால் சரிதான். எதிரி கைதானது 2.30 மணிக்கு என்றால் சரிதான். அந்த நேரம் கைது அட்டையில் 12.30 என எழுதிவிட்டு 14.30 ஆக திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காயம்பட்ட உதயராஜனை சம்பவ தினத்தன்று லட்சுமணா மருத்துவமனையில் வைத்து விசாரித்தேன். என்னிடம் நான் வாங்கியதாக சொல்லும் 161(3) வாக்குமூலம் பொய்யானது என்றும் அப்போது அவர் சுயநினைவு இல்லாமல் இருந்தார் என்றால்சரியல்ல. அவருக்கு 15 தினங்கள் கழித்து தான் சுயநினைவு வந்தது என்றால் சரிதான். சம்பவயிடம் வளைவான பகுதி என்றால் சரிதான். ரோட்டின் மையப்பகுதியில் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். காயம் பட்ட நபர்களை எதிரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்து விட்டு எதிரி தான் என்னிடம் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் சென்ற நபர்கள் வேகமாக சென்று வளைவில் திரும்ப முடியாமல் அவர்களாகவே லாரியில் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அது குறித்து எதிரி கொடுத்த புகாரை மறைத்து இறந்து போன நபருக்கு ஆதரவாக பொய் புகார் பெற்று முதல் விசாரணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல.